## ஜப்பானிய தூதராலயம்

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: +94-11-2693831~3, FAX: +94-11-2698629
E-mail: cultujpn@co.mofa.go.jp

ஊடக வெளியீடு

ஜுலை 19, 2013

## ஜப்பான் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கு உத்தரவாதமளிக்கும் செயற்திட்டத்திற்கு நிதியளிக்கிறது

ஜப்பானிய அரசாங்கம் "தேர்தல் நடவடிக்கைகளில் பிரஜைகளின் பங்கெடுத்தலை ஆயத்தப்படுத்துவதற்கும் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்குமான செயற்திட்டத்திற்கு" 88,667 US டொலர்களை (அண்ணளவாக 11.4 மில்லியன் ரூபாவை) நன்கொடையாக கீழ்மட்ட மனித பாதுகாப்புக்கான நன்கொடைத்திட்டத்தின் கீழ் வழங்க தீர்மானித்திருக்கிறது.

ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்குமுகமாக, இத்திட்டமானது வடமாகாணத்திலுள்ள உள்ளூர் மக்களை 1988 ம் ஆண்டுக்குப்பின்னர் முதலாவதாக மாகாண மட்டத்தில் வாக்குரிமையை பயன்படுத்த ஊக்குவிப்பதையும் வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் நடப்பதை உறுதிப்படுத்துவதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தேர்தல் கண்காணிப்பு நிறுவனமொன்றான நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை (PAFFREL) பல்வேறு தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை நடுநிலையுடன் நடாத்தும்.

1987ம் ஆண்டிலிருந்து பரந்த சேவை அனுபவத்தைக்கொண்ட PAFFREL ஆனது வடக்கில் மாகாண சபைத் தேர்தல் முறை தொடர்பான தெளிவுபடுத்தலை மேற்கொள்வதுடன் மூன்று மாகாணங்களிலும் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு தேர்தல் கண்காணிப்பாளரை ஈடுபடுத்தும். மேலும் மக்களின் அரசியல் உரிமைக்கான உடனடி பாதுகாவலனாக விளங்கும் தேர்தல் கண்காணிப்பாளருக்கு பயிற்சிகளையும் வழங்கும். ஜப்பானுடன் 7 வது முறையாக இணைந்து செயற்படும் PAFFREL ஆனது சமாதானத்தை ஸ்திரப்படுத்துவதற்கான ஜப்பானுடைய உறுதிப்பாட்டை மக்களுக்கு எடுத்துச் செல்லும்.

சமாதானத்தை கட்டியெழுப்புதல், புணரமைப்பு மற்றும் மீழ்கட்டுமாணத்திற்கான ஜப்பானிய அரசாங்கத்தின் இலங்கைக்கான பிரதிநிதி யசுசி அகாசி அவர்களின் தலைமையின் கீழ் ஜப்பான் இலங்கையின் தேசிய நல்லிணக்க செயன்முறையை ஊக்குவித்துக்கொண்டிருக்கிறது. 2013 மார்ச் மாதம் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜப்பானுக்கு விஜயம் செய்த தருணத்தில் ஜப்பான் பிரதமர் சின்சோ அபே உடனான தனது சந்திப்பின் போது வடமாகாணத்திற்கான தேர்தலை நடாத்துவதற்கான தனது உறுதியான பொறுப்பை தெரிவித்தார். மேன்மை தங்கிய ஜனாதிபதியால் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நலலிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் ஜுலை 5ம் திகதி தேர்தல் ஆணையாளருக்கு வடமாகாணத்திற்கான தேர்தலை நடாத்துவதற்கு உத்தரவிட்டு எடுத்த பூர்வாங்க வேலையை ஜப்பானிய அரசாங்கம் பாராட்டுகிறது. இத்தேர்தலானது தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கையில் இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய மைல் கல்லாக இருக்கும்.

இத்தேர்தல்கள் முற்றுமுழுதான உள்ளூர் செயன்முறை என்பதை அங்கீகரித்து, ஜப்பான் தனது இத்தேர்தல் உதவிகள் பாதகமற்ற முறையில் கீழ் மட்ட மக்களிடையேயும் PAFFREL நிறுவனம் மூலம் சென்றடையும் என எதிர்ப்பார்க்கிறது. மேலும் இச்செயற்திட்டம் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கும் தேர்தல் வன்முறைகளை தவிர்த்து கருத்துச் சுதந்திரத்தில் மக்களின் நம்பிக்கையையும் நாட்டின் ஜனநாயக அரசியல் நடவடிக்கைகளில் அவர்களின் பங்கெடுத்தலையும் கட்டியெழுப்பும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை மேலும் உயர்த்துமென ஜப்பான் எதிர்ப்பார்க்கிறது

இந்நன்கொடை தொடர்பான ஒப்பந்தம் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் திரு. நொபுஹிதொ ஹொபொ மற்றும் PAFFREL நிறுவனத்தின் நிறைவேற்றதிகாரி திரு. ரோகண ஹெட்டியாரச்சி ஆகியோருக்கிடையே PAFFREL நிறுவனத்தின் தலைவி ஜெஸிமா ஸ்மாயில் முன்னிலையில் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் இல்லத்தில் ஜுலை 19,2013 அன்று கைச்சாத்திடப்பட்டது.


For further information, please contact;
Economic Cooperation Section of the Embassy of Japan
Tel: 011-2693831 ext 225
Email: cultujpn@co.mofa.go.jp